Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 146/18

**Deposition of P.W.7**

| | | |
|---|---|---|
| Name | : | அன்புமதி (காவல் ஆய்வாளர் ஓய்வு) |
| Husband's Name | : | அய்யாசாமி |
| Village | : | சீரங்கம் |
| Religion | : | இந்து |
| Age | : | **63/2022** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 11.11.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று சீரங்கத்தில் வசித்து வருகிறேன். ஆலங்குடி அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி புரிந்தபோது கடந்த **19.01.2017** ம் தேதி ராணி க.பெ.புண்ணியமூர்த்தி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன்மீது மனு ரசீது எண் **3/2017** வழங்கி அதன்மீது விசாரணை மேற்கொண்டு **27.03.2017** நிலையகுற்ற எண் **4/2017** இதச சட்டப்பிரிவுகள் **498(ஏ),494, உ/இ வரதட்சணை தடுப்புச்சட்டம் பிரிவு 4 ன் கீழ்** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். சாட்சியால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் அன்றையதினமே மாலை **4.15** மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராணி, செல்வராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனிதனியாக பதிவு செய்தேன். பின்னர் **28.03.2017** ம் தேதி சாட்சிகள் தசரதன், ரவிக்குமார், சுப்பிரமணியன், சிவநாதன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனிதனியாக பதிவு செய்தேன். பின்னர் **11.07.2017** ம் தேதி வழக்கின் சம்பவம் தொடர்பாக வேண்டுகோள்கடிதத்துடன் மாவட்ட சமூக நல அலுவலருக்கு வரதட்சணை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்குமாறு கடிதம் அனுப்பினேன். அதன்பேரில் மாவட்ட சமூக நல அலுவலர் விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கையினை என்னிடம் அளித்தார். **மாவட்ட சமூக நல அலுவலரால் அளிக்கப்பட்ட அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைதுசெய்யப்படவில்லை. பின்னர் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் கவிதா நான் விசாரித்த சாட்சிகளை விசாரித்தபோது சாட்சிகள் என்னிடம் அளித்த வாக்குமூலத்தையே ஆய்வாளர் கவிதா அவர்களிடமும் அளித்ததால் அவைகளை அவர் தனியாக பதிவு செய்யவில்லை. வழக்கின் விசாரணை அடிப்படையில் எதிரிகள் மீதான **498(ஏ),494, உ/இ வரதட்சணை தடுப்புச்சட்டம் பிரிவு 4 ன் என்பதிலிருந்து** இதச சட்டப்பிரிவுகள் **498(ஏ),494,** உ/இ **109** ன் கீழ் சட்டமாறுதலறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அது **அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் புலன்விசாரணை முடித்த காவல் ஆய்வாளர் கவிதா எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் இதச சட்டப்பிரிவுகள் **498(ஏ),494,** உ/இ **109** ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.